**22TAP208A**

**PSG COLLEGE OF ARTS & SCIENCE**
(AUTONOMOUS)

**MA DEGREE EXAMINATION MAY 2023**
(Second Semester)

Branch – **TAMIL**

**MAJOR ELECTIVE COURSE –I : TAMIL ILAKKANA VARALARU**

Time: Three Hours Maximum: 50 Marks

**பகுதி-அ**

**I சரியான விடையைத் தேர்ந்தெடுத்து எழுதுக. (5x1=5)**

1. சொல்லிலக்கணத்தை மட்டும் கூற எழுதப்பட்டுள்ள நூல்?
அ) நேமிநாதம் ஆ) இலக்கணக் கொத்து
இ) இலக்கண விளக்கம் ஈ) வீரசோழியம்

2. இறையனார் அகப்பொருளின் சான்றிலக்கியமாக விளங்குவது?
அ) பாண்டிக்கோவை ஆ) தஞ்சைவாணன் கோவை
இ) திருக்கோவை ஈ) அசதிக்கோவை

3. யாப்பிலக்கணம் பயில்வோருக்கான கருவி நூல் எது?
அ) தொல்காப்பியம் ஆ) யாப்பருங்கலம்
இ) யாப்பருங்கலக் காரிகை ஈ) யாப்பு நூல்

4. வடமொழிக்கும் தென்மொழிக்கும் உரிய இலக்கண ஒற்றுமையை எடுத்துக்காட்ட முயன்ற நூல்?
அ) பிரபந்த தீபிகை ஆ) விவேக சிந்தாமணி
இ) பிரயோக விவேகம் ஈ) பிரபந்த மரபியல்

5. தொல்காப்பிய உவமையியலின் நீட்சியாகத் தமிழில் உருவான இலக்கண மரபு எது?
அ) எழுத்திலக்கண மரபு ஆ) சொல்லிலக்கண மரபு
இ) பொருளிலக்கண மரபு ஈ) அணியிலக்கண மரபு

**பகுதி ஆ**

**II அனைத்து வினாக்களுக்கும் குறுகிய அளவில் விடையளிக்கவும். (5x3=15)**

6. அ) தமிழில் ஐந்திலக்கணம் குறித்து எழுதப்பட்ட நூல்கள் எத்தனை? பட்டியலிடுக.

(அல்லது)

ஆ) நேமிநாதம் குறித்து எழுதுக.

7. அ) தொல்காப்பியரின் புறத்திணை வைப்பு முறை யாது?

(அல்லது)

ஆ) நம்பியகப் பொருள் நூல் அமைப்பு பற்றிக் கூறுக.

Cont…

8. அ) பாட்டியல் நூல்களில் சிதம்பரப் பாட்டியலின் தனித்தன்மையினை எடுத்துரைக்க.

(அல்லது)

ஆ) தண்டியலங்காரம் கூறும் செய்யுள் வகை எத்தனை? குறிப்பிடுக.

9. அ) அகத்திய மரபு குறித்து எடுத்துரைக்கவும்.

(அல்லது)

ஆ) சான்றிலக்கியம் என்றால் என்ன? எடுத்துக்காட்டுத் தருக.

10. அ) தொல்காப்பியரின் அடிக்கோட்பாடு யாது?

(அல்லது)

ஆ) அறுவகை இலக்கணம் குறித்து விளக்கிக் கூறுக.

## பகுதி இ

**III அனைத்து வினாக்களுக்கும் இரு பக்க அளவில் விடையளிக்கவும். (5x6=30)**

11. அ) தமிழ் எழுத்திலக்கண வளர்ச்சி வரலாறு குறித்து ஆராய்ந்து எழுதுக.

(அல்லது)

ஆ) தொல்காப்பிய மரபைத் தழுவி நேமிநாதம் எழுதப்பட்டுள்ளது என்பதை நிறுவுக.

12. அ) தமிழில் புறத்திணை வளர்ச்சி பெற்ற பாங்கினைத் தொகுத்துரைக்கவும்.

(அல்லது)

ஆ) தொல்காப்பியரின் அகத்திணை மரபு வழி அகப்பொருள் வரலாற்றை எழுதுக.

13. அ) யாப்பருங்கலக்காரிகை சிறப்பியல்புகளை ஆராய்க.

(அல்லது)

ஆ) தண்டியலங்காரம் மற்றும் மாறனலங்காரம் கூறும் அணி வகைப்பாடுகள் குறித்து மதிப்பீடு செய்க.

14. அ) வீரசோழியம் நூல் அமைப்பு பற்றி விளக்குக.

(அல்லது)

ஆ) தமிழிலக்கண மரபும் போக்கும் என்னும் தலைப்பில் ஒரு கட்டுரை வரைக.

15. அ) தொல்காப்பிய கூற்றுக் கோட்பாட்டிற்கும் நம்பியகப்பொருளின் துறைக் கோட்பாட்டிற்கும் உள்ள ஒற்றுமை, வேற்றுமைகளை விவரி?

(அல்லது)

ஆ) மறைந்துபோன தமிழ் நூல்களில் இடம்பெறும் இலக்கண நூல் குறிப்புகளைத் தொகுத்து எழுதுக.

Z-Z-Z END